## சுருக்கம்

கூட்டுறவு – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கீழான அறிவிப்பு – 31.01.2021 அன்று கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெற்ற 16,43,347 விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகை ரூ.12,110.74 கோடியை தள்ளுபடி செய்தது – வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.16 நாள்: 08.02.2021

சார்வரி வருடம், தை 26,

திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்க:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110ன் கீழ் ஆற்றிய உரை, நாள் 05.02.2021. (த.நா.ச.பே.எண்.01).
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் (மு.கூ.பொ) கடிதம் எண். ந.க.6666/2021 வேகதி2, நாள் 05.02.2021.
3. அரசாணை(நிலை)எண்.15, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிசி1)த் துறை, நாள் 08.02.2021.

-------

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 05.02.2021 அன்று சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ், கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற 16.43 இலட்சம் விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தார்கள்.

2. மேற்படி அறிவிப்பிற்கிணங்க, மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற 16,43,347 விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110.74 கோடி ரூபாய் 31.01.2021 அன்றுள்ளவாறு தள்ளுபடி செய்து ஆணை வழங்குமாறும், அதற்காக பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்குமாறும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற 16,43,347 விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகையான 12,110.74 கோடி ரூபாய் 31.01.2021 அன்றுள்ளவாறு தள்ளுபடி செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(த.பி.பா)

4. மேற்குறிப்பிட்ட அரசாணையைச் செயல்படுத்த ஏதுவாக இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது. இந்த வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றும்படி அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவுரை வழங்கும்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார். மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவரத்தை அறிக்கையாக வாரந்தோறும் அரசுக்கு அனுப்பிவைக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேற்கண்டவாறு தள்ளுபடி செய்யப்பட்ட பயிர்க் கடன் தொகையினை அளவீடு (Quantification) மற்றும் செலவு ஈடு (reimbursement) செய்து உரிய குறிப்பான ஆணைகள் வெளியிட ஏதுவாக, ஒருங்கிணைக்கப்பட்ட கருத்துருவினை (Consolidated Proposal) விரைவில் அரசிற்கு அனுப்பி வைக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.கு.எண்.6177/ கூ.உ(ம)நு.பா/2021, நாள் 08.02.2021–ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை– 600 010.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி,
சென்னை– 600 001.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி,
சென்னை– 600 004.
மாநில கணக்காயர், சென்னை –600 018. (2 நகல்கள்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –600 035. (2 நகல்கள்)
நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச்செயலாளர், நிதித்துறை, சென்னை– 600 009.
கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை –600 009.
நிதி (கூ,உ(ம)நு.பா)த் துறை, சென்னை– 600 009.
வேளாண்மைத் துறை, சென்னை– 600 009.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கி. சென்னவேல்
8/02/2021
பிரிவு அலுவலர்

8.2.21

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.16, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிசி1)த் துறை, நாள் 08.02.2021இன் படி, 31.01.2021 இல் நிலுவையிலுள்ள பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

1. பயிர்க்கடன் தள்ளுபடி திட்டம் 2021 கீழ்க்கண்ட கூட்டுறவுச் சங்கங்கள் / வங்கிகளால் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களுக்குப் பொருந்தும்.

(i) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS), பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமப்புற கூட்டுறவுக் கடன் சங்கங்கள், உழவர் பணி கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட),

(ii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களாக இருந்து நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றம் செய்யப்பட்டவை.

2. விவசாயிகளால் பெறப்பட்டு 31.01.2021 அன்று நிலுவையிலிருந்த கீழ்காணும் பயிர்க் கடன்களுக்கான அசல், வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவினங்கள் ஆகிய அனைத்தும் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்.

(அ) குறுகிய கால பயிர்க்கடன்

(ஆ) நகையீட்டின் பேரில் வழங்கப்பட்ட குறுகிய கால பயிர்க்கடன் [நகைக்கடன் (வேளாண்மை)]

3. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988 சட்டப்பிரிவு 81, 82 மற்றும் 87 ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சட்டபூர்வ விசாரணை, நிதி முறைகேடுகள், குற்ற நடவடிக்கைகள் மற்றும் தண்டதீர்வை நடவடிக்கைகளுக்கும், நிதி முறைகேடுகளுக்கும் உள்ளான இனங்களுக்கு இத்திட்டம் பொருந்தாது. இத்தகைய இனங்களில், விசாரணை முடிவின் அடிப்படையில் இத்திட்டத்தின் பலன் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

4. போலி ஆவணங்களின் அடிப்படையிலோ, புனையப்பட்ட ஆவணங்கள் அடிப்படையிலோ, நம்பகத் தன்மையற்ற ஆவணங்களின் அடிப்படையிலோ வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் பினாமி கடன்கள் என நிரூபிக்கப்படும் கடன்களுக்கு இத்திட்டம் பொருந்தாது.

**கணக்கீட்டு முறை**

5. இத்திட்டத்தின்கீழ் தகுதி பெறும் ஒவ்வொரு உறுப்பினருக்கும், 31.01.2021 அன்று வரை நிலுவை உள்ள பயிர்க் கடன்களுக்கான அசல், வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவினங்கள் தொகுக்கப்பட வேண்டும். இவ்வாறு தொகுக்கப்பட்ட தொகையே இத்திட்டத்தின்கீழ் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய மொத்த தொகையாகும். இவ்வாறு தொகுக்கப்பட்ட தொகையில் அசல் மற்றும் வட்டி மட்டுமே அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகையாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் கணக்கிடப்பட வேண்டும். தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் ஆகியவையும் இக்கணக்கீட்டு முறையினையே பின்பற்ற வேண்டும்.

6. அரசு திட்டங்களின் கீழ், பயிர்க் கடன்களுக்காக அரசிடமிருந்து மானியம் ஏதேனும் பெற்று இருந்தால், பெறப்பட்ட மானியம் போக, எஞ்சிய தொகை மட்டுமே தள்ளுபடி செய்யப்படும்.

7. சிட்டா, பட்டா போன்ற ஆவணங்களுடன் குறிப்பிட்ட நிலத்தில் பயிர் செய்ய நகையீட்டின் பெயரில் பெறப்பட்ட நகைகடன் (வேளாண்மை) மட்டுமே தள்ளுபடி செய்ய தகுதி உடையதாகும். வேளாண்மை சாராத இனங்களுக்கு வழங்கப்பட்ட நகைக்கடன்கள் இத்தள்ளுபடி திட்டத்திற்குத் தகுதியற்றவையாகும்.

(த.பி.பா)

8. மேலே வரிசை எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டு 31.01.2021 அன்று தேதியில் நிலுவையிலுள்ள தகுதியான பயிர்க்கடன்களுக்கான அசல், வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவினங்கள் தள்ளுபடி செய்யப்படும். 01.02.2021 முதல் மேற்கூறிய கடன்களுக்கு விவசாயிகளிடமிருந்து வட்டி வசூலித்தல் கூடாது. 01.02.2021 தேதியில் இணைப்புச் சங்கங்களிடமிருந்தும் உயர்நிதி நிறுவனங்கள் வட்டி வசூல் செய்தல் கூடாது. ஏற்கெனவே வட்டி கணக்கிடப்பட்டிருப்பின் இத்தொகை கணக்கு புத்தகங்களில் மீள் பதிவு செய்யப்பட வேண்டும்.

9. 31.01.2021 தேதியில் நிலுவையிலுள்ள பயிர்க்கடன்களுக்குரிய அசல் மற்றும் வட்டி மட்டுமே அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக காண்பிக்க வேண்டும். அபராத வட்டி மற்றும் இதர செலவினங்களைச் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களே ஏற்க வேண்டும்.

10. இவ்வாறு தள்ளுபடி செய்யப்படும் தொகையின் அசல் மற்றும் வட்டிப் பகுதியை மட்டும் அரசால் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தவணைமுறையில் விடுவிக்கப்படும். விடுவிக்கப்படும் தொகையினை அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகையில் பெறப்பட்ட விகிதாச்சார அடிப்படையின்கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் நேர் செய்ய வேண்டும்.

11. விவசாயிகள் ஏற்கனவே பங்குத்தொகை செலுத்தியிருந்து, அதற்குரிய கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அதே விவசாயிகளுக்குப் புதிய கடன் வழங்க கூட்டுறவு நிறுவனங்கள் அந்தப் பங்குத்தொகையையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் பங்குத்தொகையைத் திரும்ப வழங்கக்கூடாது. இதே நிலையை உயர்நிலை நிதி நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும்.

12. <u>கடன் தொகைகளைச் சரிபார்த்தல் மற்றும் தொகுத்தலுக்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்:-</u>

I. உறுப்பினர்களின் அனைத்து தகுதியுள்ள கடன்களின் பட்டியல் மென் மற்றும் வன் பிரதிகளில் எக்ஸெல் (M.S.Excel format) படிவங்களில் சங்கத்தின் செயலரால் விடுதலின்றி முழுமையாக தயாரிக்கப்பட வேண்டும். போலி ஆவணங்களின் அடிப்படையிலும், பினாமி கடன்கள் அல்லது புனையப்பட்ட ஆவணங்கள் அல்லது நம்பகத் தன்மையற்ற ஆவணங்களின் அடிப்படையில் பெறப்பட்ட கடன்கள் மேற்படி பட்டியலில் சேர்க்கப்பட கூடாது. சங்கத்தின் செயலர் பட்டியல் தயாரித்து, சரிபார்த்த பின்னர், சங்கத்தின் நிர்வாகக் குழுவின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

II. மத்திய கூட்டுறவு வங்கியில் சரக மேற்பார்வையாளர் / கள மேலாளர் மற்றும் கள அலுவலர் (கூட்டுறவு) / கூட்டுறவு சார்பதிவாளர் மேற்படி பட்டியலைச் சரிப்பார்த்து சான்றொப்பம் செய்து மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

III. மண்டல இணைப்பதிவாளர் சங்கம் வாரியாக பெறப்பட்ட பட்டியல்களை முழுமையாக சரிபார்க்கும் பொருட்டு மாவட்ட மத்திய வங்கி பணியாளர் உள்ளிட்ட மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழுவினை அமைக்க வேண்டும். மேலும், மற்ற மாவட்டங்களிலிருந்து அலுவலர்களை இப்பணிக்கு உட்படுத்தி சங்கம் வாரியான கடன்களில் குறைந்தபட்சம் 10 சதவீதம் கடன்களைக் கூரிய முறையில் சரிபார்க்க வேண்டும். இவ்வாறு சரிபார்க்கப்பட்ட பட்டியலை உரிய படிவத்தில் ஒரு வார காலத்திற்குள் மத்திய கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்களுக்கு சம்பந்தப்பட்ட துணைப்பதிவாளர்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு தொகுக்கப்பட்ட பட்டியலில் மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர்கள் மற்றும் மண்டல இணைப்பதிவாளர்கள் மேலொப்பமிட்டு தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

IV. மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட பட்டியலினைத் தொகுத்து தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

<u>கூட்டுறவுத் தணிக்கை துறைக்கு பட்டியல் வழங்கல்</u>

13. மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு அனுப்பப்படும் இறுதி பட்டியலின் நகலினை கூட்டுறவு தணிக்கைத் துறைக்கு தணிக்கைக்கு அளிக்க வேண்டும். கூட்டுறவு தணிக்கைத் துறையின் கூர்ந்தாய்வுக்குப்பின் உரிய முன்மொழிவினை மண்டல இணைப்பதிவாளர்கள் வழியாக பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

<u>நிதி பகிர்ந்தளிக்கும் முறை</u>

14. தமிழ்நாடு அரசு 31.01.2021 தேதியில் நிலுவையிலுள்ள அசல் மற்றும் வட்டியுடனான மொத்த தள்ளுபடி தொகையைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 7 சதவீதம் வட்டியுடன் தவணைகளில் ஐந்து ஆண்டுகளில் விடுவிக்கப்படும். நபார்டு வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையை வட்டியுடன் அரசே செலுத்தும். உயர் நிலை கூட்டுறவு நிறுவனங்களான தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் சொந்த நிதிக்கு, எந்தவொரு வட்டி மானியமும் அல்லது மத்திய அரசின் வட்டி மானியமும் 31.01.2021 க்கு பின் பெறப்படவில்லையெனில் இவ்வாறாக தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகைக்கு 7 % வட்டி விகிதம் பொருந்தும். வட்டி மானியம் பெறப்பட்டிருப்பின் வழங்கப்படும் தொகை அந்த அளவிற்கு மாற்றம் அல்லது ஈடு செய்யப்படும். அப்படி இருப்பின், அரசு வழங்கும் தொகை அதற்கேற்ப நிர்ணயிக்கப்படும்.

15. தகுதியான கடன்களுக்கான தள்ளுபடித் தொகை அரசால் தவணை முறையில் விடுவிக்கப்படும்போது எந்த விகிதாசாரத்தில் அரசிடமிருந்து பெறப்படுகிறதோ அதே விகிதாசாரத்தில் அனைத்து அடுக்குகளிலும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

$$\frac{\text{அரசால் விடுவிக்கப்படும் தொகை}}{\text{அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய மொத்த தள்ளுபடி தொகை}} \times 100$$

16. ஒவ்வொரு விவசாயிக்கும் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட சான்றிதழ் மற்றும் "நிலுவையின்மைச் சான்று" வழங்கப்பட வேண்டும்.

17. கூட்டுறவுச் சங்கங்கள் பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தின்கீழ் தள்ளுபடி செய்ய தகுதியான கடன்களை வசூலிக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது.

18. கடன் தள்ளுபடி திட்டத்தின்கீழ் தள்ளுபடி பெற்ற விவசாயிகள் புதிய கடன்கள் பெற தகுதியுடையவர்கள்.

19. கூட்டுறவுச் சங்கங்கள், தள்ளுபடி செய்யப்பட்ட கடன் எண் மற்றும் கடன் தொகை விவரங்களை அனைத்து விவசாயிகளுக்கும் தனித்தனியாக கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும்.

20. "நிலுவையின்மைச் சான்றிதழ்" வழங்கப்பட்டவுடன், விவசாயிகளால் கடன் பெற பிணையமாக வைக்கப்பட்ட அசல் நிலப்பதிவேடுகள் / ஆவணங்கள் மற்றும் நகைகள் ஆகிய அனைத்தும் விவசாயிகளுக்கு உடனடியாக திருப்பி வழங்கப்பட வேண்டும்.

(த.பி.பா)

21. கடன் தள்ளுபடி செய்யப்பட்ட அனைத்து விவசாயிகளின் பெயர், உறுப்பினர் எண், கடன் எண், நில உடமை விவரம் மற்றும் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட தொகையின் விவரம் ஆகியவற்றை, பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் கூட்டுறவு நிறுவனங்களின் அறிவிப்பு பலகைகளில் வெளியிடப்பட வேண்டும். இத்துடன் மேற்கூறிய விவரங்களைக் கிராமப்பகுதிகளில் குறிப்பாக, கிராம பஞ்சாயத்து அலுவலகம் / கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களிலும் பொதுமக்கள் பார்க்கும் வண்ணம் வைக்கப்பட வேண்டும். இவ்வாறு அறிவிப்புப் பலகையில் விவரங்கள் வெளியிடப்பட்ட ஒரு வார காலத்திற்குள் ஆட்சேபணை ஏதும் பெறப்படின் அவற்றினை ஆய்வு செய்ய இணைப்பதிவாளர் ஒரு குழுவினைத் தனியாக அமைத்து ஒரு வார காலத்திற்குள் சரிபார்க்க வேண்டும். தள்ளுபடி தொடர்பான இறுதி விவரங்கள் இணையத்தளத்திலும் வெளியிடப்பட வேண்டும்.

22. அரசிடமிருந்து தள்ளுப்படிக்கான குறிப்பான ஆணையைப் பெற்றவுடன் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குப் பதிவேடுகளில் கடன் தள்ளுபடி விவரங்களைப் பதிவு மேற்கொள்ளுதல், பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பான மேல்முறையீடு தொடர்பான அறிவுரைகளை வழங்குவதுடன் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை சங்க ஆவணங்களுடன் ஒத்திசைவு செய்யவும் உரிய அறிவுரை வழங்குவார். பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தினை விரைவாக நடைமுறைப்படுத்துவதனை உறுதி செய்ய ஏதுவாக உரிய கண்காணிப்புப் பணிகளையும் பதிவாளர் மேற்கொள்வார்.

23. விவசாய நகைக்கடன்கள் (Agricultural Jewel Loan (Short Term)) மற்றும் இதர நகைக்கடன்களை (Other Jewel Loans) வகைப்பாடு செய்வதில் எவ்வித முரண்பாடுகள் ஏற்படாதவாறு, இக்கடன்கள் தெளிவாக வகைப்படுத்தப்படுவதை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் உறுதி செய்திட வேண்டும். விவசாய நகைக்கடன்களில் சிட்டா மற்றும் அடங்கல் ஆவணங்களின் நகல் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தயானந்த் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

இரா. சென்னவேல்
8/02/2021

பிரிவு அலுவலர்.

8.2.21